# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

**TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL**

# அரையாண்டுத் தேர்வு

# 2013 - 2014

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 10

சுட்டெண்:.............................................................. நேரம்: 180 மணித்துளிகள்

**1) தேர்விடை வினா - சரியான விடைக்குரிய எழுத்தின் கூட்டில் புள்ளடி இடுக.**

1. பின்வருவனவற்றுள் சார்பெழுத்து

அ) அ ஆ) ண் இ) கே ஈ) ஔ

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

2. மருதநில அரங்கில் விளக்கு ஏற்றினாற்போல் தோற்றமளித்தவை

அ) குவளை மலர்கள் ஆ) செந்தாமரை மலர்கள்

இ) அல்லி மலர்கள் ஈ) நீல மலர்கள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

3. சேரமன்னரின் கொடி

அ) நந்திக்கொடி ஆ) புலிக்கொடி இ) மீன் கொடி ஈ) விற்கொடி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

4. கவிஞர் காசிஆனந்தன் பிறந்த ஊர்

அ) மட்டக்களப்பு ஆ) யாழ்ப்பாணம்

இ) திருகோணமலை ஈ) மன்னார்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

5. பின்வருவனவற்றுள் குற்றியலுகர எழுத்து

அ) லு ஆ) பு இ) நு ஈ) மு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

6. பின்வருவனவற்றுள் தனிமொழி

அ) மண் ஆ) இராப்பகல் இ) தங்கை ஈ) தாமரை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

7. இமய வரம்பினில் மீன் கொடி ஏற்றிய மன்னன்

அ) சேரன் ஆ) பாண்டியன்

இ) சோழன் ஈ) பல்லவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

8. வேரில் பழுக்கும் பழம்

அ) மா ஆ) கொய்யா இ) பலா ஈ) வாழை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

9. இசைக்குலப் பெண்

அ) விறலி ஆ) ஆய்ச்சி இ) உழத்தி ஈ) பாடினி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

10. ஒவ்வொரு சொல்லியத்திலும் இறுதியில் வருவது

அ) முற்றுப்புள்ளி ஆ) முக்காற்புள்ளி

இ) காற்புள்ளி ஈ) அரைப்புள்ளி

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

11. கழக இலக்கியங்களில் அகம் எனச் சுட்டப்படுவது

அ) போர் ஆ) வீரம் இ) காதல் ஈ) மானம்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

12. வயலும் வயல் சார்ந்த இடம்

அ) மருதம் ஆ) குறிஞ்சி இ) முல்லை ஈ) நெய்தல்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

13. செவ்வழி என்பது

அ) காலைப்பண் ஆ) மாலைப்பண்

இ) இரவுப்பண் ஈ) அந்திப்பண்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

14. நான் இனிமையான உணவை நன்றாக உண்டேன்.
இச்சொல்லியத்தில் வந்துள்ள செயப்படுபொருள் அடைமொழி

அ) நான் ஆ) உணவு இ) இனிமையான ஈ) நன்றாக

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

15. வடதிசை மன்னரின் செருக்கை அடக்கிய மன்னன்

அ) இராசஇராசசோழன் ஆ) சேரலாதன்
இ) குலோத்துங்கன் ஈ) சேரன்செங்குட்டுவன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

16. மொழிக்கு இறுதியில் வரும் எழுத்துகளின் எண்ணிக்கை

அ) 100 ஆ) 20 இ) 18 ஈ) 30

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

17. ‘தீமை ஒழிக இச் சொல்லிய வகை

அ) வினா ஆ) செப்பு இ) வியங்கோள் ஈ) வியப்பு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

18. ‘கொட்டு தமிழா முரசம் - அடா
குறட்டைத் தூக்கம் நிறுத்தடா’ என்று முழங்கிய கவிஞர்

அ) பாவேந்தர் ஆ) காசிஆனந்தன்
இ) புதுவை இரத்தினதுரை ஈ) கண்ணதாசன்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

19. பின்வருவனவற்றுள் தெரிநிலை வினை அல்லாதது

அ) வேனிலான் ஆ) ஓடியது இ) உண்டான் ஈ) நடந்தன

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

20. அச்சம் இன்றி ஆடிப்பாட வேண்டுவது

அ) பணம் ஆ) வீடு இ) செல்வம் ஈ) விடுதலை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

21. செயப்படுபொருள் குன்றிய வினையடி

அ) பாடு ஆ) ஆடு இ) ஓடு ஈ) தேடு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

22. பின்வருவனவற்றுள் வன்றொடர்க் குற்றியலுகரச்சொல்

அ) பந்து ஆ) தட்டு இ) முரசு ஈ) செய்து

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

23. அந்நாளில் நாவலந்தீவு என அழைக்கப்பட்டது

அ) இலங்கை ஆ) குமரிக்கண்டம்
இ) இந்தியா ஈ) அவுத்திரேலியா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

24. இடுகுறிப் பெயராக அமைவது

அ) தொலைபேசி ஆ) நாற்காலி
இ) காற்று ஈ) பறவை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

25. கடலில் மூழ்கிப்போன குமரிக்கண்டம் பற்றிய செய்திகளைக் கூறும் நூல்களில் ஒன்று

அ) அகநானூறு ஆ) கலித்தொகை
இ) புறநானூறு ஈ) நற்றிணை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

26. வினையாலணையும் பெயர்களில் ஒன்று

அ) பாடியவன் ஆ) ஓடினான்

இ) இருந்தான் ஈ) நடந்தான்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

27. குந்தவியால் நடனம் ஆடப்பட்டது. இச்சொல்லியம்

அ) செய்வினை ஆ) செயப்பாட்டு வினை

இ) குறைவினை ஈ) எதிர்மறை வினை

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

28. பூவார் சோலை மயிலால.. என்ற பாடலைப் பாடியவர்

அ) பாவேந்தர் ஆ) முடியரசன்

இ) புகழேந்தி ஈ) இளங்கோவடிகள்

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

29. பரிதி என்ற சொல் குறித்து நிற்பது

அ) வானம் ஆ) விண்மீன்

இ) கதிரவன் ஈ) நிலா

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

30. தமிழ்க் கழகங்கள்

அ) நான்கு ஆ) மூன்று

இ) ஐந்து ஈ) இரண்டு

அ) ☐ ஆ) ☐ இ) ☐ ஈ) ☐

புள்ளிகள் 30

**2) பந்தியை வாசித்து; வினாக்களுக்கு முழுவிடை தருக.**

கி.மு 205 இல் அசேலன் என்னும் சிங்கள மன்னனை வெற்றி கொண்டு எல்லாளமாமன்னன் அநுராத புரத்தைக் கைப்பற்றினான். வெற்றி வாகை சூடிய எல்லாளன் அரண்மனை நோக்கி அரச பெருவீதியால் யானையில் வந்து கொண்டிருக்கிறான். அவனைச் சூழ மெய்க்காவலர்கள் தலைவர்கள் வருகின்றனர். பின் தொடர்ந்து எல்லாளனது படைப்பிரிவொன்று வந்து கொண்டிருக்கிறது. தோற்றோடிய சிங்களப்படை வீரரும் அடைக்கலம் அடைந்த பல்லாயிரம் படைவீரரும் விலங்கிடப்பட்டுக் கொண்டுவரப் படுகின்றனர். மாடகூடங்கள் நிறைந்த பெருந்தெரு அது. சாளரங்களில் நின்று பார்த்துக் கொண்டிருந்த சிங்களப் பெண்கள் படபடவென்று சாளரங்களை மூடுகின்றனர். தெருக்கரைகளில் நின்றிருந்த இளமங்கையர் ஓடி ஒழிகின்றனர். ஆனால் தமிழ்ப்படை வீரர்கள் பெண்களைக் கண்டதாகக் காட்டிக் கொள்ளவேயில்லை. அவர்களுக்கு அது வியப்பாக இருந்தது. ஓ ! தமிழர்கள் நல்லவர்கள். சாளரங்கள் திறக்கப்படுகின்றன. பெண்கள் மெல்ல மெல்ல வெளியே வருகின்றனர். ஆனால் இவற்றையும் தமிழ்ப்படை வீரர்கள் கண்டு கொள்ளவேயில்லை. பெண்களின் முகங்கள் மலர்ந்தன. எல்லாளனின் சிறந்த குணத்தை வியந்தனர். அதனாற்றான் துட்டகெமுனு சூழ்ச்சி செய்து கொல்லும் வரை நாற்பத்து நான்கு ஆண்டுகள் அறந்தவறாது இலங்கையை ஆட்சி செய்தான் எல்லாளமாமன்னன்.

1. எல்லாளனைச் சூழ்ச்சி செய்து கொன்றவன் யார்?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

2. யார் விலங்கிடப்பட்டு கொண்டுவரப் படுகிறார்கள்?

_______________________________________________

_______________________________________________

_______________________________________________

3. அசேலனை வெற்றி கொண்ட மன்னன் யார்?

4. பெருந்தெரு எதனால் நிறைந்து காணப்பட்டது?

5. இப்பந்தியில் வந்துள்ள இரட்டைக்கிளவி, அடுக்குத்தொடர் என்பவற்றைத் தருக.

புள்ளிகள் 10

**3) பாடநூல் வினா - ஏழினுள் ஐந்திற்கு விடை தருக.**

1. கனகவிசயரின் முடித்தலை நெரித்து கல்லினை வைத்த மன்னன் யார்?

2. சிந்துவெளி சுமேரிய நாகரிகங்கள் எவ்வாறு தோன்றின?

3. குமரிக்கண்டத்தின் இன்றைய பெயர் என்ன?

4. இயற்கைத் தாய் எவ்வாறு முடியரசனைத் தாலாட்டுகிறாள்?

5. கழக இலக்கியங்களில் உள்ள புறத்திணை நூல்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

6. குமரிக்கண்டத்தில் ஓடிய ஆறுகள் இரண்டினதும் பெயர்களைத் தருக.

7. வானவரம்பன் என்ற பெயருக்குரிய மன்னன் யார்?

புள்ளிகள் 10

**4) பொருத்தமான சொற்களை எழுதி கவிதையை ஆக்குவோம்.**

## உன்னால் முடியும்

| | | | | |
|---|---|---|---|---|
| கிடைக்காதே | சொல்லாதே | ஏதும் | உழைப்பாய் | நீ |

முயற்சி ____________________ செய்யாமல் - நீ

முடியாது என்று ____________________

இயலாது என்று ____________________ நினைத்தால்

எதுவும் உனக்குக் ____________________

அயராது ____________________எந்நாளும்

அனைத்தும் சேரும் உன்வாழ்வில்

புள்ளிகள் 10

**5) இலக்கண / மொழியியல் வினாக்கள் அனைத்திற்கும் விடை தருக.**

1. பின்வரும் நிறுத்தற்குறிகள் இடம் பெறுமாறு சொல்லியங்கள் எழுதுக.

காற்புள்ளி:- ______________________________

______________________________

இரட்டை மேற்கோட்குறி:-

______________________________

______________________________

2. பின்வரும் குற்றியலுகரச் சொற்களுக்கு ஒவ்வொரு எடுத்துக்கட்டுத் தருக.

உயிர்த்தொடர்க் குற்றியலுகரம்:- ____________________

இடைத்தொடர்க் குற்றியலுகரம்:- ____________________

3 . மண்வெட்டி, மரம், வானொலி, பறவை, நிலம், முள்ளி
இப்பெயர்ச்சொற்களைப் பின்வருமாறு ஒழுங்குபடுத்துக.

| இடுகுறிப்பெயர் | காரணப்பெயர் | காரண இடுகுறிப்பெயர் |
| --- | --- | --- |
| ____________ | ____________ | ____________ |
| ____________ | ____________ | ____________ |

4 . செயப்படுபொருள் குன்றிய சொல்லியம், செயப்படுபொருள் குன்றாத சொல்லியம் இவை ஒவ்வொன்றுக்கும் எடுத்துக்காட்டுத் தருக.

______________________________________________

______________________________________________

______________________________________________

______________________________________________

5 . பின்வருவனவற்றுக்கு எடுத்துக்காட்டுகள் தருக.

1. தன்வினை ____________
2. பிறவினை ____________
3. எதிர்மறை வினை ____________

புள்ளிகள் 15

**6) பந்தியை வாழிடமொழியில் மாற்றி எழுதுக.**

**மிகப்பழங்காலத்தில் இருந்தே ஈழமும் தமிழகமும் தமிழரின் தாயகங்கள். இன்று தமிழர்கள் உலகம் முழுவதும் வாழ்கின்றனர். மலேசியா, சிங்கப்பூர் தென்னாபிரிக்கா, கனடா மற்றும் ஐரோப்பிய நாடுகளிலும் தமிழர்கள் அதிகமாக வாழ்கின்றனர். அவர்கள் எங்கு வாழ்ந்தாலும் தமிழைப் பேசுகின்றனர். அது மட்டுமன்றி இணைய வலையிலும் இன்று தமிழ் இடம்பிடித்துள்ளது.**

புள்ளிகள் 05

**7) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவுசெய்து 200 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- ★ சேரமான் வஞ்சினம்
- ★ கவிஞர் கண்ணதாசனும் அவரது பாடல்களும்
- ★ வாழிடக் கல்வியும் தமிழ்க்கல்வியும்

புள்ளிகள் 20